# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 22 புதன்கிழமை 08.10.2025 கதிர் 333



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## யாழ். பல்கலை கலைப்பீட இளங்கலைமாணி ஆய்வு மாநாடு






யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு இன்று புதன்கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஆய்வு மாநாட்டின் முதன்மை விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொண்டார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் ஆரம்பித்த ஆய்வு மாநாட்டில் இலங்கை திறந்த 7

### திண்மக் கழிவுகளைச் சேகரிக்கும் நிலையம் அமைப்புக்கு எதிராக

# அரியாலையில் வீதியை மறித்து மக்கள் மாபெரும் போராட்டம்!







யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ். அரியாலையில் திண்மக் கழிவுகளைச் சேகரிக்கும் நிலையம் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் இன்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியாலை கிழக்குப் பகுதியில் இன்று காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுச் சில நிமிடங்களில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் போராட்ட இடத்துக்கு வரவேண்டும் என்று கூறி வீதியை வழிமறித்ததால் போக்குவரத்து தடைப்பட்டது.

அதனை அடுத்து, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் போராட்ட இடத்துக்கு வருகை தந்திருந்தார். அதன்போது தவிசாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. 7

## மலையக மக்களுக்கான டில்லியின் உதவி தொடரும்

### மனோ அணியிடம் தூதுவர் உறுதி



கொழும்பு, ஒக். 08

இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. 7

## இலங்கையை மீட்க சர்வாதிகாரி வேண்டுமாம்

### இப்படி பொன்சேகா கூறுகின்றார்



கொழும்பு, ஒக். 08

இலங்கையை மீட்பதற்கு, நாட்டை நேசிக்கக்கூடிய - அர்ப்பணிப்பான சர்வாதிகாரி அவசியம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் 7

## கொத்மலை ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு!



லிந்துலை, ஒக். 08

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் கொத்மலை ஓயாவில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று புதன்கிழமை உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான 7

## மாகாண சபைத் தேர்தலை ஏன் இன்னும் நடத்தவில்லை?

### இப்படி நாமல் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஒக். 08

தமிழர்களுக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை வழங்குவோம் என்று கூறியவர்கள், மாகாண 7

# 165,512 வாகன இலக்கத் தகடுகள் இன்னும் நிலுவையில்! அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஒக் .08

புதிய வாகன இலக்கத் தகடுகளை வழங்கும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க இன்று நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இது தொடர்பாக சபையில் எழுப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 2025 செப்டம்பர் 30 நிலவரப்படி, மொத்தம் 165,512 வாகன இலக்கத் தகடுகள் இன்னும் வழங்கப்படவில்லை என்றார்.

நாங்கள் ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட வாகன இலக்கத் தகடுகளை வழங்குவது மிகவும் தாமதமானது.

புதிய இலக்கத் தகடுகளில் ஏழு சிறப்பு பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. இலங்கையில் இந்த அம்சங்களை சோதிக்கும் பணியை மொரட்டுவா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தோம்.

இந்த செயல்முறைக்கு அவர்கள் சுமார் மூன்று மாதங்கள் எடுத்துக் கொண்டனர். எனினும், ஏழு அம்சங்களில் ஆறு அம்சங்களை மட்டுமே அவர்களால் சரிபார்க்க முடிந்தது.

எனவே, ஏழாவது அம்சத்திற்காக நாங்கள் சர்வதேச சோதனையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதுதான் இந்த தாமதத்திற்கு முக்கிய காரணம்.

பாதுகாப்பு அளவை மேம்படுத்த நாங்கள் எடுத்த முயற்சிகளும் இதன் விளைவாக தாமதத்திற்கு பங்களித்தன.

இதனிடையே, புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் ஒக்டோபர் 18 ஆம் திகதிக்குள் தீர்க்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# கிளிநொச்சியில் கண்களை கவர்ந்த பாரம்பரிய நடனங்கள்



சுற்றுலா தினத்தின் நிலைபேறான மாற்றம் என்ற தொனிப்பொருளில் உலக சுற்றுலா தினம் கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நேற்று சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண சுற்றுலாப்பணியகமும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வுக்கு முன்னதாக பண்பாட்டு பவனி காக்கா கடைச்சந்தியிலிருந்து பசுமைப்பூங்கா வரை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பாரம்பரிய நடனங்களும் பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன. சுளகு நடனம், மயில் நடனம், ஒயிலாட்டம், கும்மி, நாடகங்கள் எனப் பலவகையான பாரம்பரிய நிகழ்வுகள் ஆற்றுகைப்படுத்தப்பட்டன. சிறியவர்கள் முதல் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆற்றுகைகளை வெளிப்படுத்தினர்.

சிறியவர்கள், பெரியவர்களது ஆற்றுகைகளும் அலங்காரங்களும் பார்ப்பவர்களின் கண்களைக் கவரும் வகையில் அமைந்தது.

வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் எஸ். முரளிதரன், கௌரவ விருந்தினராக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் ஏ. வேலமாலிகிதன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்ட செயலாளர் நளாயினி இன்பராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# கொழும்பு வர்த்தக நிலையமொன்றில் தீ விபத்து!

கொழும்பு, ஒக் .08

கொழும்பு பன்னிப்பிட்டிய, தெபானாம பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள பிளாஸ்டிக் கடையொன்றிலேயே தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி தீயினை கட்டுப்படுத்தி கோட்டை மாநகர சபையின் 2 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# வாள்களுடன் கைது செய்யப்பட்ட யாழ் இளைஞன்

யாழ்ப்பாணம், பாஷையூர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தகைதுநடவடிக்கைநேற்றுமேற்கொள்ளப்பட்டுள்ளது. 24 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து மூன்று வாள்கள் மற்றும் கையடக்க தொலைபேசியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் நீண்ட காலமாக தலைமறைவாக இருந்ததாகவும், சந்தேக நபருக்கு எதிராக ஏற்கனவே சில குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாமோவ தொடர்பிலான மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து, அவரை இன்று (08) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நீதி அமைச்சின் மேலதிக செயலர் கைது!

*கொழும்பு, ஒக். 08*

*நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ராஜபக்ஷ பதிரகே சேபாலிகா சமன் குமாரி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.*

*ஊழல் மற்றும் நிகி மோசடி குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணிக்குரிய நட்டஈடு கொடுப்பனவு தொடர்பாகவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட அதிகாரிகளின் குழுவினாலும் நட்டஈடு வழங்குவதற்கான அலுவலகத்தின்பணிப்பாளர் சபையினாலும் இந்தச் சொத்துக்கான நட்டஈடு நிராகரிக்கப்பட்டது என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*ஆனால் 2024 ஆம் ஆண்டு சமன் குமாரி, மனோஜி ஹேமலால் ஏகநாயக்கவுக்கு நிதியுதவியை விடுவிப்பதற்கு ஒப்புதல் கோரி, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் அனுப்பினார் எனக் கூறப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் முறையான ஒப்புதல் இன்றி இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*இதே குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த முன்பிணை கோரிக்கை மனு ஒத்திவைப்பு!

*முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த மனு மீதான உத்தரவு எதிர்வரும் 14ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று கொழும்பு நீதவான் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.*

*கடந்த அரசாங்கத்தின் போது விவசாய வேலைகளுக்காக இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்புவதில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நடத்திய விசாரணைக்கு அமைய தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னர், முன்பிணையில் விடுவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார மனு தாக்கல் செய்திருந்தார்.*

*குறித்த முன்பிணைக் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# ஓட்டுநர் உரிமம் அச்சிடுவதில் மிகப்பெரிய ஊழல்



கொழும்பு, ஒக் .08

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஒரே தனியார் நிறுவனம் ஓட்டுநர் உரிமங்களை அச்சிடுவதில் மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க புதன்கிழமை (08) அன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஓட்டுநர் உரிமங்களை அச்சிடும் ஒப்பந்தத்தை ஒரு நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் பெரிய அளவில் நிதிவீணடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஓட்டுநர்உரிமத்தை அச்சிடுவதற்கு தனியார் நிறுவனம் ரூ.534.54 செலவாகும் என்றும், அதே நேரத்தில் சுஆஏ மூலம்ரூ. 367 செலவில் ஒன்றை அச்சிடமுடியும் என்றும் அவர் கூறினார்.

"மோட்டார் வாகனப் பதிவு துறை (RMV) மூலம் ஓட்டுநர் உரிமங்களை அச்சிடுவது என்று நாங்கள் முடிவுசெய்துள்ளோம். அதற்காக அச்சிடும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன" என்று அமைச்சர் தெரிவித்தார். (ஜ)

# நவம்பருக்குள் பெண் ஓட்டுநர்கள், நடத்துனர்கள்

கொழும்பு, ஒக் .08


பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களாக பெண்கள் நவம்பர் மாத இறுதிக்குள் ணியமர்த்தப்படுவார்கள் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் நிதியொதுக்கீட்டை நிறைவேற்றுவதற்கான விவாதத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நவம்பர் மாத இறுதிக்குள் பெண் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் பணியமர்த்தப்படுவார்கள். மெட்ரோ பேருந்து சேவையையும் தொடங்குவோம். பேருந்து டிக்கெட்டுகள் மோசடி செய்யப்படுவது அனைவரும் அறிந்த உண்மை. எனவே, அட்டை கட்டண முறையை நிறுவ கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்போதுள்ள பேருந்து டிக்கெட் இயந்திரங்கள் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்துவதற்கான வசதிகளுடன் நவம்பர் 30 ஆம் திகதிக்குள் வழங்கப்படும். பொது பயணிகள் போக்குவரத்து இன்னும் மோசமான நிலையில் உள்ளது. அதைத் தீர்க்க அனைவரும் உதவுமாறு அமைச்சர் கூறினார்.(ஜ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் அதிகரிப்பு!





கொழும்பு, ஒக் .08

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் அதிகரிப்பை பதிவு செய்துள்ளன.

அதன்படி கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது செப்டம்பர் மாதத்தில் 1.1மூ அதிகரித்துள்ளன.

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 6.17 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகி இருந்த நிலையில், செப்டம்பர் மாதத்தில் 6.24 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூக ஊடகங்கள் மூலம் அதிகரிக்கும் நிதி மோசடிகள்– பொலிஸாரின் எச்சரிக்கை!

கொழும்பு, ஒக் .08

சமூக ஊடகங்கள் ஊடக அதிகரித்து வரும் நிதி மோசடிகள் குறித்து பொது மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி டெலிகிராம் மற்றும் வாட்ஸ்அப் ஊடாக நிதி மோசடிகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இணையத்தில் நடைபெறும் மோசடி குறித்து தினமும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட மற்றும் வங்கி கணக்குகள் உள்ளிட்ட தகவல்களை ஏனையோருடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம் எனவும்

பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மோசடி செய்பவர்கள் வங்கிக் கணக்கு எண்கள், பயனர்பெயர்கள், கடவுச்சொற்கள் மற்றும் ஞசு குறியீடுகள் உள்ளிட்ட இரகசிய விபரங்களை பெற்றுக்கொள்ள போலியாக ஒன்லைன் வேலை வாய்ப்புகளை வழங்குதல் அல்லது விரைவான நிதி ஆதாயங்களை உறுதியளித்தல் போன்ற பல்வேறு தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்படுவதாக

விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோசடியாளர்கள் சமூக ஊடகங்கள் மூலம் செயற்படுவதால் அவர்களை அடையாளம் காண்பது இலகுவான விடயமல்ல என்றும்

பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் நாடளாவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகஅறிவிப்பு

இன்று) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளையில் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜகத் சந்திரலால் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பட்ஜெட் விவாதத்தில், எங்கள் சேவை யாப்பு திருத்தங்களுடன் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சேவை யாப்பு மே 1ஆம் திகதிக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

அனால் இன்று, அது ஒரு பொய்யான வாக்குறுதியாக மாறிவிட்டது.

கிராம உத்தியோகத்தர் கூட்டணியின் திருத்தங்களுடன் இந்த சேவை யாப்பை உடனடியாக வர்த்தமானியில் வெளியிட்டு அமுல்படுத்துமாறு இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

இல்லையெனில், இந்த அரசாங்கத்திற்கு எதிராக நாங்கள் வீதிகளில் இறங்க வேண்டியிருக்கும்.

அதேநேரம் கடந்த பட்ஜெட்டில் 20 லிட்டர் எரிபொருள் ஒதுக்கீடு குறைக்கப்பட்டது.

ஒன்றிணைந்த கூட்டணியாக வரவிருக்கும் பட்ஜெட்டில் இந்த ஒதுக்கீடுகள் எங்களுக்குக் கிடைக்காவிட்டால், நாடளாவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளோம்- என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தில்லுமுல்லு செய்து வெற்றி பெற பாஜக முயற்சி: அமைச்சர் கே.என்.நேரு பரபரப்பு குற்றச்சாட்டு



பீகாரில் கடைப்பிடிக்கப்பட்ட தில்லு முல்லுகளை போல தமிழ்நாட்டிலும் செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள் என அமைச்சர் கே.என்.நேரு குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ளுஐசு என்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை அனைத்து மாநிலங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்திருக்கிறார். இந்தியா கூட்டணி சார்பில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் வாக்காளர் பட்டியல் முறைகேடு தொடர்பாக ஆதாரங்களோடு தொடர்ந்து எழுப்பிய கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் இதுவரை உரிய பதிலை அளிக்கவில்லை.

ஆட்சிகளை மாற்றுவது, அமைப்பது ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்களின் உரிமை. அதனைத் தேர்தல் ஆணையம் கையில் எடுப்பது, ஒன்றிய அரசுக்கு ஆதரவாகச் செயல்படுவது ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமம். அந்தச் செயலைத் தமிழ்நாடு நிச்சயம் அனுமதிக்காது.பீகாரைப் போலத் தற்போது ளுஐசு என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டம் ஏதேனும் செயல்படுத்த ஒன்றிய பாஜக அரசு முயன்றால், அதற்கு எதிராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஒன்று சேர்ந்து போராடும். தமிழ்நாட்டு மக்களை நேர் நின்று வீழ்த்த முடியாத எதிரிகளும் துரோகிகளும் குறுக்கு வழியைக் கையாண்டு வென்றிடலாம் எனப் பகல் கனவு காண்கிறார்கள்.

அதற்குத் தமிழர்கள் தக்கப் பதிலடி கொடுப்பார்கள். ளுஐசு என்ற அநீதிக்கு எதிராகத் தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். மோடி அரசு அமைந்த பிறகு தன்னாட்சி அதிகாரங்கள் கொண்ட சி.பி.ஐ, ஆர்.பி.ஐ, சி.ஏ.ஜி, என்.ஐ.ஏ, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, நிதி ஆயோக் அமைப்புகள் ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறின. இந்த வரிசையில் தேர்தல் ஆணையமும் ஒன்றிய அரசின் கண் அசைவுக்கு ஏற்ப நடக்க ஆரம்பித்திருக்கிறது. தேர்தல் ஆணையம் தன் நடுநிலை தன்மையை இழந்துவிட்டதற்குத் தொடர்ச்சியாக நிறைய நிகழ்வுகள் நடந்து வருகின்றன. உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தல் தேதி முன்கூட்டியே பிரதமர் மோடிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனால்தான் முதல் கட்ட தேர்தல் நடந்த தமிழ்நாட்டில் பல்லடம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, சென்னை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் முன்னரே பிரச்சாரக் கூட்டங்களை நடத்திவிட்டு போனார் பிரதமர் மோடி. இதன் மூலம் தேர்தல் தேதி ரகசியத்தைத் தேர்தல் ஆணையம் காக்கத் தவறியது அப்பட்டமாகவே வெளிப்பட்டது. பீகாரில் சுமார் 8 கோடி வாக்காளர்கள் உள்ளனர். ளுஐசு என்ற பெயரில் தேர்தல் ஆணையம் பல லட்சம் வாக்காளர்களை நீக்கியது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. உச்ச நீதிமன்றமே கண்டித்தது. பீகார் வாக்காளர் பட்டியலிலிருந்து முதலில் 65 லட்சம் பேரைத் தேர்தல் ஆணையம் நீக்கியது. அடுத்து 3.7 லட்சம் பேரை நீக்கினார்கள். இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தன.

இப்போது புதிதாக 21 இலட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இணைத்திருக்கிறது தேர்தல் ஆணையம். நீக்கப்பட்ட 3.7 லட்சம் பேரின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும், புதிதாகச் சேர்க்கப்பட்ட 21 இலட்சம் பேரும் முன்பு நீக்கப்பட்ட வாக்காளர்களா? அல்லது புதிய வாக்காளர்களா? என்ற விவரங்களை அளிக்குமாறும் தேர்தல் ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தை நோக்கி உச்ச நீதிமன்றத்தின் கேள்விகள், ளுஐசு மேற்கொள்வதில் தேர்தல் ஆணையத்திடம் உள்ள நேர்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம்சாட்டினார்.

பாஜக கூட்டணியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர் சிராக் பாஸ்வானின் சொந்தத் தொகுதியிலேயே 80 சதவிகித பட்டியல் சமூகத்தினரிடம் தேர்தல் ஆணையம் கேட்கும் ஆவணங்கள் இல்லை. பாஜகவுக்கு எதிராக வாக்களிக்கும் இஸ்லாமியர்கள். பட்டியல் வகுப்பினர் உள்ளிட்டவர்களின் வாக்குகளைப் பறிப்பதே ளுஐசு-ன் நோக்கம் என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது. பீகாரில் பல லட்சக்கணக்கானவர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து ஏன் நீக்கினார்கள்? அதிலிருந்து சில இலட்சக்கணக்கானோரை மீண்டும் ஏன் சேர்த்தார்கள்? என்பதற்குத் தேர்தல் ஆணையம் தெளிவான பதில் அளிக்கவில்லை. ஜனநாயகத்தின் ஆணிவேரான தேர்தலை நேர்மையோடு நடத்துவதே தேர்தல் ஆணையத்தின் தலையாய பணி. ஆனால், தேர்தல்களில் தில்லுமுல்லு செய்து வெற்றியை ஈட்ட முனையும் பாஜகவின் நடவடிக்கைகளுக்குத் துணை போவதாகத் தேர்தல் ஆணையம் மாறிவிடக் கூடாது. பீகாரில் ளுஐசு-ல் நடைபெற்றுள்ள மோசடியை ளுஉசழடட இணையப் பத்திரிகை கள ஆய்வு மூலம் வெட்ட வெளிச்சமாக்கியது. பீகாரின் மூன்று தொகுதிகளில் உள்ள 200 வாக்குச்சாவடிகளில் 10-ஐ பார்வையிட்டு, 100 பேரிடம் பேட்டி கண்டது. இவர்களில் வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அடங்குவர். இறந்துவிட்டதாகக் கருதப்பட்டவர்கள், நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள், பல இடங்களில் பதிவு செய்தவர்கள், அல்லது காணப்படாதவர்கள் **(absent)** என தேர்தல் ஆணையம் நான்கு காரணங்களுக்காக வாக்காளர்களை நீக்கியிருந்தது. நாங்கள் சந்தித்த பெரும்பாலான வாக்காளர்கள், பல ஆண்டுகளாக அதே முகவரியில் வசித்து வந்த போதிலும், 'காணப்படவில்லை' **(absent)** அல்லது 'இடமாற்றம்' (ளாகைவநன) என்று குறிக்கப்பட்டிருந்தனர் என ளுஉசழடட தெரிவித்திருக்கிறது. தேர்தல் ஆணையம், "வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பு" நடத்தப்படும் என்று தெளிவாகக் கூறியிருந்த போதிலும், வாக்குச்சாவடி அலுவலர்கள் **(BLOs)** தங்கள் வீடுகளுக்கு வரவே இல்லை என்று வாக்காளர்கள் **Scroll** செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். பீகாரில் கடைப்பிடிக்கப்பட்ட தில்லு முல்லுகளை போல தமிழ்நாட்டிலும் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். கள ஆய்வு மேற்கொள்ளப்படாமலேயே நமது வாக்காளர்களை நீக்கவும் வெளி வாக்காளர்களைச் சேர்க்கவும் முயற்சிகள் நடக்கலாம். இந்தச் சதியைத் தமிழ்நாடு ஒன்று திரண்டு போராடும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நடிகை விஜயலட்சுமி வழக்கில் மன்னிப்பு கோரினார் சீமான்: வழக்கை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம்





நடிகை விஜயலட்சுமி குறித்து அவதூறு பேசியதற்காக உச்ச நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரி, அனைத்து குற்றச்சாட்டுகளையும் சீமான் திரும்ப பெற்றார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி பாலியல் உறவு வைத்துக்கொண்டு பின்னர் ஏமாற்றியதாக வளசரவாக்கம் போலீசில் நடிகை விஜயலட்சுமி புகார் செய்திருந்தார். அதன்பேரில் சீமான் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் சீமான் மனு தாக்கல் செய்திருந்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீமன்றம், வழக்கை ரத்து செய்ய முடியாது என்று, அதேப்போன்று 12 வாரத்துக்குள் போலீசார் வழக்கை விசாரித்து முடிக்க வேண்டும்என்றும்உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து சீமான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு கடந்த 12 ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, நடிகையிடம் சீமான் வரும் 24ம் தேதிக்குள் மன்னிப்பு கேட்க வேண்டும். மன்னிப்பு கோர தவறினால், சீமானை கைது செய்வதற்கான தடை ரத்து செய்யப்படும். வழக்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறியது.

இந்நிலையில் இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.வி.நாகரத்னா, ஆர்.மகாதேவன் அமர்வில் மீண்டும் விசாரணை வந்தது. அப்போது சீமான் தரப்பில், தனது சொல் மற்றும் செயல்களால் விஜயலட்சுமிக்கு ஏற்பட்ட எந்தவொரு வலி அல்லது காயத்திற்கும் நிபந்தனையின்றி மன்னிப்பு கோருவதாகவும், விஜயலட்சுமிக்கு எதிராக தான் கூறிய அனைத்து அறிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகளையும் திரும்பப் பெறுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், விஜயலட்சுமி குறித்து ஊடகங்களில் எந்த கருத்தையும் தெரிவிக்கமாட்டேன் என உறுதியளிப்பதாகவும் , அதேபோல் விஜயலட்சுமியும் தனக்கு உரிய மரியாதை வழங்குவார் என நம்புவதாகவும் கூறியுள்ளார்.

இதையடுத்து நடிகை விஜயலட்சுமி தரப்பில், சீமான் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவது தனது கண்ணித்தை மீட்டெடுக்கும் என்பதால், உச்சநீதிமன்ற அறிவுறுத்தல் அடிப்படையில் சீமான் மீது தொடர்ந்த வழக்கை வாபஸ் பெற தயாராக உள்ளேன்ஆனால் ஆனால் மன்னிப்பு கேட்க முடியாது நான் சீமானால் பாதிப்படைந்துள்ளேன் எனவே உரிய இழப்பீட்டை வழங்க உத்தரவிட வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இருதரப்பும் மன்னிப்புக் கோர வேண்டும் என்பது தான் நீதிமன்றத்தின் உத்தரவு என தெரிவித்த நீதிபதிகள் சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டனர். (ஐ)



# அரசு தலைமைப் பதவியில் 25 ஆண்டுகள்.. பிரதமர் மோடிக்கு எடப்பாடி பழனிசாமி, அன்புமணி வாழ்த்து

பிரதமர் மோடி, குஜராத் முதலமைச்சராக பதவி வகித்து, பின்னர் பிரதமராக பொறுப்பேற்று நேற்றுடன் 25 ஆண்டுகள் ஆகிறது. இதையொட்டி அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், பிரதமர் மோடிக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பாமக அன்புமணி ராமதாஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர்கள் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியதாவது

25 ஆண்டுகளாக அரசியலமைப்புச் சட்டத் தலைவராக தொடர்ந்து பதவி வகித்து வரலாற்றுச் சாதனை படைத்ததற்காக, மாண்புமிகு பிரதமர் மோடிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த இணையற்ற மைல்கல், உங்கள் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவம், அரசியல் சாசனம் மற்றும் ஜனநாயக விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கும், நேர்மையுடன் தேசத்திற்கு சேவை செய்வதற்கும் உள்ள உறுதியான அர்ப்பணிப்புக்கு சான்றாக நிற்கிறது என்று கூறியுள்ளார்.

நரேந்திர மோடி அவர்களின் இந்த சாதனைப் பயணம் 2001-ஆம் ஆண்டு புஜ் நில நடுக்கத்தைத் தொடர்ந்து குஜராத் மாநிலம் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் அம்மாநிலத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றதில் தொடங்கியது. அதன்பின் இந்தியாவின் பிரதமராக பொறுப்பேற்று 11 ஆண்டுகள் 135 நாள்கள் அந்தப் பதவியில் தொடர்வதன் மூலம், ஜவகர்லால் நேரு அவர்களுக்கு அடுத்தபடியாக தொடர்ச்சியாக அப்பதவியில் நீடிக்கும் இரண்டாவது தலைவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ஐ)



# சித்த மருத்துவத்தின் மீது மக்களுக்கு ஆர்வம் அதிகரித்துள்ளதா?



இன்றைய நாளில் மக்களுக்கு வரும் உடல் நல பாதிப்புகளுக்கும் அலோபதி எனும் ஆங்கில மருத்துவத்தைத் தேடி ஓடிக்கொண்டிருந்த மக்கள், இன்று இந்திய மரபுசார் மருத்துவத்தின் மீது அக்கறை கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். பாரம்பரிய மருத்துவத்தின் இன்றைய நிலை என்ன .

" மக்களின் கல்வி நிலை அதிகரித்த இந்நாட்களில் மக்கள் பயன் தராத எதையும் ஒப்புக்கொள்வதில்லை. எனவே, மக்கள் சித்த மருத்துவத்தின் மீது கூடுதலாக அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பதே ஒரு அப்டேட் நிலைமைதான். மேலும், சர்க்கரை நோய் என்று எடுத்துக்கொண்டால் சித்த மருத்துவத்தில் அந்த பாதிப்புக்கு மட்டும் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அதன் காரணமாக ஏற்படும் பக்க விளைவுகளுக்கும் மருந்துகளை சிபாரிசு செய்யும்.மேலும், உடல் சார்ந்து மட்டுமில்லை மனம் சார்ந்தும் மருந்து வழங்கப்படும். உணவு முறைகளையும், வாழ்வியல் முறைகளையும் மாற்றிக்கொள்ள ஆலோசனையுடந்தான் சித்த மருந்துகள் கொடுக்கப்படும். இதுதான் சித்த மருத்துவத்தின் சிறப்பு. ஒரு காலத்தில் குடும்ப மருத்துவமாக இருந்த இதனை, மக்கள் இன்று உணர ஆரம்பித்துள்ளது வரவேற்கத் தகுந்தது!"

சமீப காலமாக மாற்று மருத்துவத்தின் மீது மக்களுக்கு அதீத நாட்டம் உருவாகியுள்ளதற்கு என்ன காரணம்?

"மாற்று மருத்துவம் என்கிற பதமே தவறானது. ஆங்கில மருத்துவத்தைத் தவிர்த்த மற்ற மருத்துவ முறையெல்லாம்'மாற்று மருத்துவ முறை (யுடவநசயெவளைந ஆநனளைஉைநெ)' என்று தவறாக மீண்டும் மீண்டும் பதிய வைக்கப்படுகிறது. உண்மையில், நமது இந்திய மருத்துவ முறைகள்(ஆயுஷ்) தான் முதன்மையானது (யேவளைந ஆநனளைஉைநெ). இதில் முக்கியமானது சித்த மருத்துவம். சமீப காலமாக சித்த மருத்துவத்தைத் தேடி வருபவர்களின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டுவருவது உண்மைதான். இதற்குக் காரணம் சித்த மருத்துவத்தில் தீர்வு இருக்கிறது. உடல்காட்டும் அறிகுறிகளை முன் வைத்து சித்த மருத்துவத்தில் சிகிச்சை அளிக்கப்படுவது இல்லை. பல்வேறு பரிசோதனை முறைகள், பரிசோதனைக் கூடங்கள் எல்லாம் இன்றைக்குத்தான் வந்துள்ளன. இவை எல்லாம் இல்லாத காலத்தில் 'நாடி பார்த்தல்' எனும் நோய் அறியும் கலையின் மூலம், நோயின் மூலக் காரணத்தை அறிந்து சிகிச்சை அளிக்கும் வழக்கம் சித்த மருத்துவத்தில் இருந்தது. பல சித்தர்களால் உருவாக்கப்பட்ட சித்த மருந்துகளின் ஆற்றல் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இன்றைய மக்கள் சில உடல் கோளாறுகளை வீட்டு அஞ்சறைப் பெட்டியிலிருக்கும் பொருட்களைக் கொண்டு குணப்படுத்திக்கொள்ள முன் வந்துள்ளனர். இதன் வெளிப்பாடுதான் ஊர் முழுக்க புதிதாக தோன்றி வரும் நாட்டு மருந்துக் கடைகள்."

தகவல் தொழில்நுட்பத்தின் காரணமாக சித்த மருத்துவத்தின் மீது மக்களுக்கு ஆர்வம் அதிகரித்துள்ளதா?

"யூடியூப், இன்ஸ்டா, வாட்ஸ் அப் போன்றவை மூலம் தகவல்கள் பரப்புரையாக்கப்பட்டாலும் கூட, மக்கள் பயன்படுத்தி அதன் உண்மையை உணர்ந்ததால்தான் சித்த மருத்துவத்தைத் தேட தொடங்கியிருக்கிறார்கள். சித்த மருத்துவம் தாமதமாகத்தான் பலன் தரும் என்கிற நம்பிக்கையும் மக்களில் சிலரிடம் உள்ளது. குணப்படுத்த காலம் எடுத்தாலும், நோயின் பக்க விளைவுகளை களைவதுடன், மீண்டும் அந்த பாதிப்பு வராமல் செய்யும் ஆற்றலும் சித்தாவுக்கு உண்டு. சித்த மருத்துவத்தை அறிவியல் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தி, இன்னும் மேம்படுத்த வேண்டும் என்பதும் உண்மைதான். அரசு இதற்கென்று நிதி ஒதுக்கித் தந்து உதவினால் எதிர்வரும் காலங்களில் சித்த மருத்துவம் இன்னமும் மிளிரும்."

குறிப்பாக, எந்தெந்த நோய்களுக்கு பலன் தரும் என்று சொல்ல முடியுமா?

" ஆரம்ம்ப கால புற்று நோய் மற்றும் தொற்றா நோய்கள், ரத்த அழுத்தம் சர்க்கரை நோய், உயிர்கொல்லி நோய்களுக்கு நல்ல நிவாரணம் கொடுக்கக் கூடியது, தொடர்ந்து சித்த மருந்துகளை சாப்பிட்டு வருவது கட்டாயம் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்."

'கடப்பாரையை முழுங்கினதற்கு சுக்குக் கசாயமா' என்கிற வட்டார வழக்கை எப்படிப் பார்க்கிறீர்கள்?

"இன்றைய நாட்களில் விபத்து போன்ற தீவிர பாதிப்புகளுக்கு நவீன சிகிச்சையைத்தான் மேற்கொள்ள வேண்டும். ஆரம்ப கட்ட இதய அடைப்பு நோயை சித்தாவின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்தெந்த பாதிப்புகளுக்கு என்ன சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை மக்கள் பயன்படுத்தித்தான் தெளிவு பெற வேண்டும். நோய் வராமல் இருப்பதைத்தான் முதன்மையானதாக சித்தா தனது கொள்கையாகவே வைத்துள்ளது. இதனையும் மக்கள் மனதில் கொள்ள வேண்டும்."

நாட்டு மருத்துவம், பாட்டி வைத்தியம் என்று தமிழ் சித்த மருத்துவத்தை கருதும் போக்கும் மக்களிடம் இருக்கிறதுதானே..?

"இது மக்களின் தெளிவின்மையைத்தான் காட்டுகிறது. வாழ்வியில், பழக்க வழக்கங்கள், உணவு முறை, தூங்கு நேரம், உடற்பயிற்சி போன்றவற்றை கணித்துதான் சித்தாவில் மருந்துகள் வழங்கப்படுகின்றன. கட்டு, கலங்கு, செந்தூரம், பர்பம் போன்ற அதிஅற்புதமான சித்த மருந்துகள் உள்ளன. இவற்றை செய்ய ஏராளமான பண வசதி தேவை. இன்றைய நாளில் இவற்றை தயாரிக்க முடியாத நிலை உள்ளது. இவை எல்லாம் தயாரிக்கப்பட்டு புழக்கத்துக்கு வந்தால், சித்த மருத்துவ முறை இன்னமும் பெரிய நிலையை சென்றடையும்."



இன்று சித்த மருத்துவ கல்லூரிகளில் படித்துவிட்டு வரும் மருத்துவர்கள் மரபுரீதியான, பாரம்பரிய மருத்துவர்களை போலி மருத்துவர்களாக கருதும் நிலை இருக்கிறதுதானே..?

(7ஆம் பக்கம் பார்க்க..)

# மியான்மரில் ராணுவம் நடத்திய தாக்குதலில் 40 பேர் உயிரிழப்பு!



*மியான்மரின் சாங் யூ நகரில் புத்தமத பண்டிகையின் போது, ராணுவ ஆட்சிக்கு எதிராக கூடிய மக்கள் மீது அந்நாட்டு ராணுவம் வெடிகுண்டுகள் வீசி நடத்திய பயங்கர தாக்குதலில். 40 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 80 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.(ஐ)*

## மாற்றத்தை ஏற்படுத்தும் அதிபர்: டிரம்பை பாராட்டிய கனடா பிரதமர் மார்க் கார்னி



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் ஓவல் அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் நிருபர்கள் சந்திப்பில், மாற்றத்தை ஏற்படுத்தும் அதிபர் டிரம்ப் என கனடா பிரதமர் மார்க் கார்னி பாராட்டினார்.

அமெரிக்காவிற்கு டிரம்ப் அழைப்பின் பேரில், கனடா பிரதமர் மார்க் கார்னி சென்று இருந்தார். வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டிரம்பை சந்தித்தபோது கனடா பிரதமர் மார்க் கார்னியை கை குலுக்கி அதிபர் டிரம்ப் வரவேற்றார். அப்போது கனடா பிரதமர் டிரம்ப் இடம் நகைச்சுவையைச் செய்தார். ‘நான் உங்களுக்காக சிவப்பு நிறத்தில் டைய் அணிந்து உள்ளேன்” என மார்க் கார்னி கூறும் வீடியோ வெளியாகி உள்ளது.

சந்திப்பின் போது, டிரம்ப் கார்னியுடன் நட்புரீதியான தொனியில் பேசினார். ஏப்ரல் மாதம் பதவியேற்றதிலிருந்து வெள்ளை மாளிகைக்கு இரண்டாவது முறையாக மார்க் கார்னி வருகை தந்துள்ளார். ஏற்கனவே சிறந்த தலைவர் கார்னியை டிரம்ப் பலமுறை பாராட்டினார். அதிபர் டிரம்ப், மார்க் கார்னி ஆகிய இருவரும்உறவைவலுப்படுத்துவது, அமெரிக்க அரசு நிர்வாக முடக்கம் மற்றும் இஸ்ரேல்-காசா மோதல் என பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்தனர்.

பின்னர் நிருபர்கள் சந்திப்பில் மார்க் கார்னி கூறுகையில்,”இந்த ஆண்டு இரண்டாவது முறையாக தனக்கு விருந்து அளித்ததுக்கு அதிபர் டிரம்பிற்கு நன்றி. மாற்றத்தை ஏற்படுத்தும் அதிபர் டிரம்ப். மத்திய கிழக்கில் அமைதியை நிலை நாட்ட டிரம்ப் மேற்கொண்டு வரும் முயற்சியை நாங்கள் ஆதரிப்போம். அதற்காக நாங்கள் எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வோம்” என தெரிவித்தார்.

பிரதமர் மார்க் கார்னியுடனான இருதரப்பு சந்திப்பின் போது கனடாவை 51வது அமெரிக்க மாநிலம் என டிரம்ப் மீண்டும் நகைச்சுவையாக பேசி இருக்கிறார். பின்னர் டிரம்ப் கூறியதாவது: எங்களுக்கு சில மோதல்கள் இருந்தன. ஆனால் நாங்கள் அதை சரி செய்வோம்.

எங்களுக்குள் ஒரு வலுவான உறவு இருந்தது. நாங்கள் வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். நாங்கள் காசா மோதல் உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

## ஜெர்மனி பெண் மேயருக்கு கத்திக்குத்து



ஐரோப்பிய நாடான ஜெர்மனியில் உள்ள ரூர் பிராந்தியத்தில் ஹெர்டெக்கே நகரில், ஒரு வாரத்திற்கு முன் புதிய மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஐரிஸ் ஸ்டால்ஸர், 57. வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில், அவர், உயிருக்கு ஆபத்தான நிலையில், உடலின் பல இடங்களில் கத்திக்குத்து காயங்களுடன் கிடந்தார். சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஐரிஸ் ஸ்டால்ஸர் அடுத்த சில நாட்களில் பதவி யேற்கவிருந்த நிலையில், அவரை மர்மநபர்கள் கத்தியால் குத்திச் சென்றுள்ளனர்.

வீட்டிற்கு வந்த சில ஆண்கள், தன் தாயை தாக்கி கத்தியால் குத்தியதாக, அவருடைய 15 வயது வளர்ப்பு மகன் போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவரை சந்தேகத்தின் பெயரில் போலீசார் விசாரணைக்கு அழைத்துச்சென்று உள்ளனர்.(ஐ)



## ‘மற்றொரு நாடு ஆப்கன் நிலத்தை பயன்படுத்த அனுமதிக்க முடியாது’

### அமெரிக்காவின் முயற்சிக்கு ரஷ்யா பதிலடி

ஆப்கானிஸ்தானின் பக்ராம் விமான தளத்தை அமெரிக்கா குறி வைத்துள்ள நிலையில், அந்த நாட்டின் நிலத்தை மற்றொரு நாடு பயன் படுத்த அனுமதிக்க விட மாட்டோம் என, ரஷ்யா கூறியுள்ளது.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில், தலிபான் பயங்கரவாத அமைப்பு, 2021ல் ஆட்சி நிர்வாகத்தை கைப்பற்றியது.

நெருக்கடி பல நாடுகள் இன்னும் தலிபான் நிர்வாகத்தை முறையாக அங்கீகரிக்கவில்லை. கடந்த ஜூலையில் முதல் நாடாக ரஷ்யா அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

அங்கு அமைதி, நிலைத்தன்மை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட அமைப்பே ‘மாஸ்கோ பார்மட் கன்சல்டேசன்ஸ் ஆன் ஆப்கானிஸ்தான்!’

இந்த அமைப்பில் ஆப்கானிஸ்தான், ரஷ்யா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.

இந்த அமைப்பின் 7வது ஆலோசனைக் கூட்டம் நேற்று ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடந்தது.

இக்கூட்டத்திற்கு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தலைமை வகித்தார்.

ஆப்கானிஸ்தானின் பக்ராம் விமானப் படை தளத்தை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் சமீபத்தில் கூறினார். இது தொடர்பாக ஆப்கானிஸ்தானுக்கு அவர் நெருக்கடி கொடுத்து வருகிறார்.

இந்நிலையில், இந்தக்கூட்டத்தில் லாவ்ரோவ் பேசியதாவது:

பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த, தலிபான் அரசு அரசியல் செயல்முறைகள், பலதரப்பு செயல்பாடுகள் மற்றும் கூட்டு பொருளாதார திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுவது அவசியம்.

எந்த ஒரு சாக்குப்போக்கின் கீழும் ஆப்கானிஸ்தான் மற்றும் அதன் அண்டை நாடுகளில் மூன்றாம் தரப்பு ராணுவ உள்கட்டமைப்பை நிலைநிறுத்துவதை ரஷ்யா உறுதியாக நிராகரிக்கிறது. பிராந்தியத்திற்கு அப்பாற்பட்டவர்களின் ராணுவத்தை நிறுத்தினால் ஸ்திரத்தன்மைக்கும், புதிய மோதல்களுக்கும் அது வழிவகுக்கும்.

உதவி தொடரும் ஆப்கானிஸ்தானின் பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைக்க அந்த நாட்டுக்கு, உலக நாடுகள் உதவ வேண்டும்.

மனிதாபிமான உதவிகளுக்கு அரசியல்நிபந்தனைகளை விதிக்கக்கூடாது. ரஷ்யா தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் தலிபான் நிர்வாகத்தின் சார்பில், அந்நாட்டு வெளியுறவு துறை அமைச்சரான அமீர் கான் முட்டகி கலந்து கொண்டார். உறுப்பு நாடுகளில் உயர்மட்ட பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். (ஐ)

## கொத்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியின் லிந்துலைப் பகுதியில் கொத்மலை ஓயாவில் சடலம் ஒன்று மிதந்து கொண்டிருக்கின்றது என்று பொலிஸாருக்குப் பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்துப் பொலிஸாரால் அந்தச் சடலம் மீட்கப்பட்டது. நுவரெலியா நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று பரிசோதித்த பின்னர், பிரேத பரிசோதனைக்காகச் சடலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறப்பு தடயவியல் வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்து காணப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வ்ருய்கின்றனர்

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைத் தேர்தலை நடத்தவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கிலும் மாகாண சபைத் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ நடத்தி இருந்தார். ஆனால் அவருக்குப் பிறகு வந்த ஜனாதிபதிகளால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது. இது வெட்கக்கேடான விடயமாகும். அதிகாரத்துக்காக கொள்கையைக் கைவிடும் கட்சி அல்ல எமது கட்சி. தேர்தலில் வென்றாலும், தோற்றாலும் கொள்கைகளை கைவிட்டது கிடையாது. சில கட்சிகள் தேர்தல் வெற்றிக்காக தமது கொள்கையை மாற்றுகின்றன. அதேபோல பொய்களையும் கூறுகின்றன. இப்படியான கட்சிகளுக்கு அழிவு நிச்சயம். செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே எமது கட்சி கூறி வருகின்றது. 13ஆவது திருத்தத்தைத் தருகின்றோம், அதைத் தருகின்றோம், இதைத் தருகின்றோம் என எம்மாலும் கூறி இருக்க முடியும். ஆனால், நாங்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. 13ஆவது திருத்தத்தைத் தருவோம் என்று கூறியவர்களால், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த இயலவில்லை." - என்றார்.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் கூறியதாவது:-

"தேசிய மக்கள் சக்தி அரசானது இந்த நாட்டை இதற்கு முன்னர் ஆண்ட அரசுகளை விட ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதை எனது மனச்சாட்சியின் பிரகாரம் தெரிவிக்க முடியும். குறைந்த பட்சம் ஊழல்வாதிகளைப் பாதுகாக்காமல் இருப்பதற்குரிய முதுகெலும்பு இந்த ஆட்சிக்கு இருக்கின்றது. கடந்த காலங்களில் மோசடிகளில் ஈடுபட்டால் பண பலம் இருந்தால் இலகுவில் தப்பிக்க முடியும். ஆனால், இன்று அதற்கு தடை போடப்பட்டுள்ளது. சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது. நூற்றுக்கு 100 சதவீதம் வெற்றி இல்லை என்ற போதிலும் அதற்குரிய முயற்சியைப் பாராட்ட வேண்டும். நாட்டையும், நாட்டு மக்களையும் மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்களே எமக்கு அவசியம்.

ஆபிரிக்காவில் மிகவும் ஏழ்மையான நாடாக ருவண்டா இருந்தது. ஆனால், இன்று ஆபிரிக்காவில் சிறந்த நாடாக அது மாறியுள்ளது. இரட்டை நட்சத்திரம் கொண்ட இராணுவ அதிகாரி ஒருவரே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். நல்ல சர்வாதிகாரம் நாட்டை ஒட்டுமொத்தமாக மாற்றும். அதுதான் ருவாண்டாவில் நடந்தது.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளும் அபிவிருத்தி கண்டுள்ளன. இந்த நாடுகளில் இருந்தும் நாம் அனுபவங்களைப் பெறவேண்டும். அங்கிருந்த தலைவர்கள் நேர்மையுடன் செயற்பட்டனர். சட்டத்தை அமுல்படுத்தினர்.

எனவே, இலங்கை போன்ற வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்க நல்லதொரு சர்வாதிகாரி இருக்க வேண்டும். மஹிந்த போன்ற போலி தேசப்பற்றாளர்கள் நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளுவார்கள்." - என்றார்.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்திய வீட்டுத் திட்டம், மலையக மக்களுக்குரிய உரிமைகள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. மலையகச் சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என இதன்போது இந்தியத் தூதுவர் உறுதியளித்தார்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் சிறப்புரையை மேற்கொண்டார். கலைப்பீடத்தின் இளம் கலைமாணி ஆய்வு மாநாடு கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்று வந்தது. இம்முறை நடைபெற்ற ஐந்தாவது மாநாடு "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்" எனும் தொனிப்பொருளோடு 16 ஆய்வுத் தடங்களில் நடைபெற்றது.

இளங்கலைமாணி பட்டக் கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்த மாநாடு அமைந்தது. அவை ஆய்வுச் சுருக்கங்களாக இந்த ஆய்வு மாநாட்டின் ஆய்வடங்கல் மூலமும் வெளியிடப்பட்டன.

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்று ஆளுநர் செயலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில், "நல்லூர் பிரதேச சபை, எமது ஊர் மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக் கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும்.

இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தனமாக எந்தவகையிலும் வகைப்படுத்தப்படாத - மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிட வேண்டும்.

எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையான எமக்கு மட்டுமானதல்ல, எதிர்கால தலைமுறைக்கும் சொந்தமானவையாகும். எமது ஊரின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பை மேட்டுத் திட்டத்தைக் கண்டித்தும் அதனைக் கைவிட வேண்டும்." - என்றனர்.

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்குள் அரசியல் தலையீடுகள் அறவே வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 08

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசின் கைப்பாவையாக மாற்றி, அதன் அதிகாரங்களைப் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கும் போக்குக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பின் பக்கம் 126 இல் கூறப்பட்டுள்ளபடி, ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவது, சுயாதீனம், பாரபட்சமற்ற தன்மை மற்றும் செயற்றிறனை வலுப்படுத்தி, அரசியல் மயமாக்கலுக்கு உட்படுத்தப்படாமல் சிறந்த ஆட்சியை முன்னெடுப்பதற்காகும்.

அரசமைப்பின் 17 ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்களின் ஊடாக அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைமையினுள், இந்த நாட்டில் பொலிஸ் சேவையை பாரபட்சமின்றியும் சுயாதீனமாகவும் முன்னெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசின் கைப்பாவையாக மாற்றி, அதன் அதிகாரங்களைப் பொலிஸ்மா அதிபரிடம் கையளிப்பதற்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்குள் அரசியல் தலையீடுகள் பிரயோகிக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இந்தச் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்." - என்றார்.

# மீண்டும் நாட்டில் மின்வெட்டு ஏற்படும் அபாயம்?

கொழும்பு, ஒக் .08

மின்சார பொறியாளர்கள் சங்கம் நேற்று மாலை 4:15 மணி முதல் அனைத்து பணி விதிமுறைகளையும் நிறுத்தி வைப்பதாக எடுத்த முடிவைத் தொடர்ந்து, நாடு மின்வெட்டு மற்றும் உறுதியற்ற தன்மையை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது, இது அதன் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்துகிறது என்று சமகி கூட்டு தொழிற்சங்க கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித எச்சரித்தார்.

எமது சகோதர பத்திரிகையான டெய்லி மிரருக்கு பேட்டி அளித்த பாலித, இந்த முடிவு தன்னிச்சையாக எடுக்கப்படவில்லை என்றும், அனைத்து தொடர்புடைய அதிகாரிகளுக்கும் எழுத்துப்பூர்வமாக அறிவித்த பின்னரே எடுக்கப்பட்டது என்றும் கூறினார். வேலை விதிமுறைகளில் இருந்து விலகுவதற்கான தொழிற்சங்கத்தின் முடிவின் பின்னணியில் உள்ள காரணங்களை கடிதங்கள் தெளிவாக கோடிட்டுக் காட்டியுள்ளன என்றும் அவர் கூறினார்.

"அனைத்து பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் பணிகளும் நிலையான எட்டு மணி நேர வேலை காலத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படும். அதற்கு மேல், அவசரம் எதுவாக இருந்தாலும், எந்த பராமரிப்பு அல்லது பழுது நீக்கும் பணியும் நடைபெறாது," என்று அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபையின் (CEB) மறுசீரமைப்பு தொடர்பாகத் தொடங்கிய தொழிற்சங்கத்தின் போராட்டம், பின்னர் நிறுத்தப்பட்ட பதவி உயர்வுகள், செலுத்தப்படாத சம்பள நிலுவைகள் மற்றும் தற்காலிக ரூ. 10,000 கொடுப்பனவை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கை வரை விரிவடைந்துள்ளதாக பாலித குறிப்பிட்டார். ஜனவரி 1, 2024 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிலுவைத் தொகையுடன் 25 சதவீத சம்பள உயர்வையும் தொழிற்சங்கம் கோருகிறது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து எந்த பதிலும் இல்லை என்றும், நெருக்கடியை நிவர்த்தி செய்ய எந்த அதிகாரியும் இல்லை என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

"நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தோம், ஆனால் இந்த பிரச்சினைகளை கையாள நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தோல்வியடைந்துள்ளனர். CEB தொழிற்சங்கங்களில் சமநிலை இல்லை, இது தொடர்ந்தால், நாடு விரைவில் மின் தடையை சந்திக்கும்," என்று அவர் கூறினார்.

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மின்சார (திருத்த) சட்டமூலத்தையும் பாலித விமர்சித்தார், இது CEB-I அரசுக்கு சொந்தமான ஐந்து நிறுவனங்களாக மறுசீரமைக்கிறது. "நீண்டகால அரசு நிறுவனமான CEB, அதன் இறுதிக் காலத்தை நோக்கி தள்ளப்பட்டுள்ளது.

புதிய நிறுவனங்கள் அரசுக்குச் சொந்தமானதாக இருக்கும் அதே வேளையில், மின்சாரத் துறையில் தனியார் முதலீட்டிற்கான கதவை அரசாங்கம் திறந்துள்ளது. ஊழியர்கள் அவர்களின் ஒப்புதலுடன் புதிய நிறுவனங்களில் உள்வாங்கப்படுவார்கள்," என்று அவர் மேலும் கூறினார்.

மறுசீரமைப்பு முடிந்து ஐந்து நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டவுடன், புதிய நிறுவனங்களில் சேர ஏற்கனவே உள்ள ஊழியர்கள் CEB-யில் இருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால, மின்சார சபை தொழில்நுட்ப வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் "விதிப்படி வேலை" பிரச்சாரத்தின் விளைவாக ஏற்படும் மின்சாரத் தடைகளை நிவர்த்தி செய்ய எந்த சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்று கூறினார். நிலைமை குறித்து மின்சார சபை பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் உறுதிப்படுத்தினார்.

CEB தலைவர் மற்றும் அமைச்சரைத் தொடர்பு கொள்ள பலமுறை முயற்சித்தும் பலனளிக்கவில்லை.

இருப்பினும், நாட்டிற்கு தடையற்ற மின்சார விநியோகத்தை வழங்குவதற்கான தனது உறுதிப்பாட்டை CEB மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது, மேலும் மின்சாரம் தொடர்பான அனைத்து சேவைகளும் வர்த்தமானி எண் 2458/68 இன் கீழ் அத்தியாவசிய பொது சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சித்த மருத்துவத்தின்......

"பாரம்பரிய மருத்துவ முறை இல்லை என்றால் சித்த மருத்துவ முறையே இல்லை. இன்றைய மருத்துவ கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படுகிற பாடங்கள், மருந்து முறைகள் எல்லாம் நமது முன்னோர்கள் மரபு ரீதியாக செய்துகொண்டிருந்தவைதான். அவர்கள்தான் அஸ்திவாரங்கள். படித்துவிட்டு வந்ததாலேயே பாரம்பரிய மருத்துவர்களை போலி மருத்துவர்கள் என்று கருதுவது தவறானது. அகடாமிக் தகுதியுடன் வரும் சித்த மருத்துவ கல்லூரிகளில் படித்த பெரும்பாலான மருத்துவர்கள் நமது பாரம்பரிய முன்னோர்களை போற்றத்தான் செய்கிறார்கள்."

'சனி நீராடு', எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, பேதி மருந்து சாப்பிடுவது போன்ற பழக்க வழக்கம் எல்லாம் காணாமல் போய்விட்டது. இவற்றால் நன்மை உண்டா?

"எண்ணெய் குளியல் முறையை இப்போது பலர் கடைபிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நல்லெண்ணெயைத்தான் பயன்படுத்த வேண்டும். 'சனி நீராடு' என்பது நமது முன்னோர்கள் கடைபிடித்த சிறந்த பழக்கம். மலையிலிருந்து வரும் நீருக்கு கருப்பு நீர் என்று பெயர். அதை குறிக்கும் வகையில் உருவானதுதான் சனி நீராடு என்பது. கருப்பு நிறத்துக்கு உகந்தது சனிக்கிழமை எனவே சனிக்கிழமையில் எண்ணெய் குளியலை மேற்கொள்வது நல்லது என்று நமது முன்னோர்கள் வகுத்தார்கள். அதுபோன்றே நமது உடம்பில் கழிவுகளை அகற்றிக்கொள்ள பேதி மருந்துகள் சாப்பிடுவதும். எல்லாவற்றையும் விட 'உணவே மருந்து மருந்தே உணவு' என்பதை ஒவ்வொருவரும் கடைபிடித்தாலே நோய் வருவதில் இருந்து தப்பிக்கலாம்."







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2025 வெளியிடப்பெற்றது.